35232



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ... ඔක්කොම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**48 T**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය
இலக்கிய நயம் தமிழ்
**Appreciation of Tamil Literary Text**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

* பகுதி I இல் 1, 2 ஆகிய **இரு** வினாக்களுக்கும் பகுதி II இல் **3 ஆம்** வினாவுக்கும் பகுதி III இல் 4, 5, 6, 7 ஆகிய வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

(i) 'பிள்ளைக் கனி அமுதே - கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே' - இங்கு 'பேசும் பொற்சித்திரமே' என்ற தொடரின் சிறப்பு என்ன ?

(ii) 'உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்' இப்பாடல் அடியின் பொருள் யாது ?

(iii) 'மனவுக் கோப்பு அன்ன நல் நெடுங்கூந்தல் அகவன் மகளே' இவ்வடியின் பொருள் யாது ?

(iv) 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்' - இக்குறட்பாவை, கொண்டு கூட்டி மீண்டும் எழுதுக.

(v) 'ஏர் பிடித்து நிலங்கிழித்து பாரதத்தைக் காப்பவர் ......... ஏறுபோல வருகவே' - இங்கு கவிஞர் யாரை வருக என அழைக்கிறார் ? ஏன் அழைக்கிறார் ?

(vi) 'தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு' என அனுமன் சடாயு பற்றிக் கூறக் காரணம் யாது ?

(vii) 'நின் மகற்கு உறுத்தல் ஆகலா உறுதி
எய்தும் நாள் மறுத்தியோ' - இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது ?

(viii) 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' - இது இராமகதையின் எந்நிகழ்ச்சியைக் குறித்து நிற்கின்றது ?

(ix) 'வல்வினை வளைத்தகோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது' - இங்கு மன்னவன் எனக் குறிப்பிடப்படுபவனின் பெயர் என்ன ?
அவனது எத்தகைய குணம் இங்கு சிறப்பித்துக் காட்டப்படுகிறது ?

(x) 'ஒன்றையொன்று துன்பிழைத்தல் குற்றமென்று கண்டால் குறைவுண்டோ வாழ்வினுக்கே ?' - இவ்வடிகள் மூலம் பாரதியார் உணர்த்தும் வாழ்க்கைநெறி யாது ?

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுள்களினதும் உரைப்பகுதிகளினதும் பொருளை உங்கள் மொழிநடையில் எழுதி, தடித்த எழுத்துகளிலுள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்குக.

(i) பணிந்து, மணி செற்றுபு குயிற்றி அவிர் பைம் பொன்
அணிந்த தவிசு இட்டு, இனிது அருத்தி யொடு இருத்தி
இணைந்த கமலச் சரண் அருச்சனை செய்து **'இன்றே
துணிந்தது என்வினைத் தொடர்'** எனத் தொழுது சொல்லும்.

(ii) புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும் - **இன்னருள் கண்
டஞ்சினா னாவி யழிந்தான்** அறவுயிர்த்து
நெஞ்சினால் எல்லாம் நினைந்து

[பக். 2 ஐப் பார்க்க

(iii) மஞ்ச ளாவிய மாடங்க டோறும்
மயில்கள் போன்மட வார்கணஞ் சூழு
மஞ்ச ரோருகப் பள்ளியில் வான்சிறை
யன்ன வன்னக் குழாம்விளை யாடுந்
துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்
சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி
யிஞ்சி வேலியின் மஞ்சலிற் போய்விழு
மீழ மண்டல நாடெங்க ணாடே.

(iv) புத்தர், திருவள்ளுவர் முதலான சான்றோர்கள் தாம் வாழ்க்கையனுபவத்தால் கற்ற உண்மைகளை நம் நன்மைக்காகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கண்மூடி வாழ்ந்தவர்கள் அல்லர் ; எவ்வளவோ எண்ணிப் பார்த்து, வாழ்ந்து பார்த்து, அவற்றில் தெளிந்த உண்மைகளை நாமும் உணர்ந்து நடக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். **அவர்கள் அறிவுறுத்திய வழிகள் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் தேய்ந்த ஒற்றையடிப் பாதைகள் போன்றவை.**

(v) யூலிய சீசர் உரோமாபுரிக்கு அரசன்; மகா பராக்கிரமசாலி; கருமங்களை எண்ணியே துணிவான்; துணிந்த பிறகு, **துருவ நட்சத்திரம் அசைந்தாலும் அத்துணிபினின்றுந் தான் அசையான்**; உயிரிழக்க நேர்ந்தாலும் 'அச்சம்' என்றொரு பண்டம் அவனுக்குத் தெரியாது. வீரன் ஒரு தரம் இறக்கிறான்; பயங்காளி நூறுமுறை சாகிறான் என்று சொல்லிச் சீசர் சிரிப்பான்.

($5 \times 5 = 25$ புள்ளிகள்)

## பகுதி II

(பாடற்பகுதிக்கு **அல்லது** உரைப்பகுதிக்கு விடை எழுதுக.)

**3. கீழே தரப்பட்டுள்ள பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும், - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும், - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

பொழிலிடை வண்டின் ஒலியும், - ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும் இசையும், - வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும், - பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும், - நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!

பயிலுறும் அண்ணன் தம்பி, - அக்கம்
பக்கத் துறவின் முறையார்,
தயைமிக உடையாள் அன்னை, - என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை,
குயில்போற் பேசிடும் மனையாள், - அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை
அயலவ ராகும் வண்ணம் - தமிழ் என்
அறிவினில் உறைதல் கண்டீர்.

(i) (அ) கவிஞர் இனியன எனக் கொள்பவை எவை என்பதை உங்கள் மொழிநடையில் எழுதுக.
(ஆ) 'எனினும் தமிழை என்னுயிர் என்பேன்' என்பதன் மூலம் அவர் உணர்த்துவது யாது ?

(ii) (அ) கவிஞர் விரும்புவன எவை என உங்கள் மொழி நடையில் எழுதுக.
(ஆ) 'தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர்' எனக் குறிப்பிடுவதன் மூலம் அவர் உணர்த்துவது யாது ?

(iii) கவிஞர் தனது நெருங்கிய உறவுகளாக யாரைக் கருதுகின்றார் ? அவர்களுடனான உறவின் நெருக்கம் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது ?

(iv) தாம் கொண்டாடும் உறவுகளைவிடத் தமிழ் மேலானது என்பதைக் கவிஞர் எவ்வாறு புலப்படுத்துகின்றார் ?

(v) தமிழ் மீது தமக்குள்ள பற்றுதலைக் கவிஞர் எடுத்துக் கூறியிருக்கும் முறையிலுள்ள சிறப்பினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

**அல்லது**

[பக். 3 ஐப் பார்க்க

**கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் ஆறுமுகநாவலரும் விபுலானந்த நாவலரும் கிறிஸ்தவக் கல்லூரிகளில் ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள். விபுலானந்த அடிகளார், அக்கல்லூரிகளில் ஆசிரியராகவும் கடமையாற்றியவர். இந்தச் சூழல்தான் அவர்களைச் சைவசமயப் பணியில் ஈடுபடத் தூண்டுகோலாக இருந்தது. பண்டிதமணி அவர்கள் நாவலர் என்ற நூலில் ஆறாம் பக்கத்தில் கூறியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் கூறுகின்றார்:

"பெயரளவில் திருவாவடுதுறை ஆதீனம் ஆறுமுகநாவலரைத் தந்ததேயாயினும், உண்மையை நோக்குமிடத்துப் பதினான்கு வருடக் கிறிஸ்தவ சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது. பதினான்கு வருடக் கிறிஸ்தவ சூழல் அமையாதிருந்தால் ஆறுமுகநாவலர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை."

இது விபுலானந்த அடிகளுக்கும் பொருந்தும். சுவாமி சர்வானந்தரின் தரிசனமே விபுலானந்த அடிகளை எமக்குத் தந்ததாயினும் கிறிஸ்தவக் கல்லூரிகளில் அவர் பயின்றமையும் ஆசிரியராகக் கடமையாற்றியமையுமே அவரைக் கிழக்கிலங்கையின் ஆறுமுகநாவலராகவும் விஞ்ஞான அறிஞராகவும் எமக்குத் தந்தன.

இவ்விடத்து இருவருக்குமுள்ள வேற்றுமை ஒன்றினைக் குறிப்பிட வேண்டும். விபுலானந்த அடிகள் இலண்டன் கேம்பிரிட்ஜ் சீனியர் தேர்விலே தேர்ச்சி பெற்றார். பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியரானார். சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராக இருந்த காலத்தில் இலண்டன் பி.எஸ்.சி. தேர்விலே தேர்ச்சியடைந்தார். மேலும் மதுரைத் தமிழ்ப் பண்டிதராகவும் விளங்கினார். அடிகளார் இவ்வாறு பெற்ற விஞ்ஞான, தமிழ்ப்பேறுகளே அவர் பிற்காலத்திற் பல்துறைப்பட்ட ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு வழிகோலிக் கொடுத்தன.

ஆறுமுகநாவலருக்குச் சமயம் உயிர்; மொழி உடல். உயிர் நிலைபெறுவதற்கு உடலை நல்ல முறையிற் பேண வேண்டும். எனவேதான் சமயத்தை வளர்ப்பதற்கு மொழி வளர்ச்சி அவசியமாயிற்று. மொழியைப் பேணுவதற்குக் கல்வியை விருத்தி செய்தல் இன்றியமையாததாகும். தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள், முக்கிய தலந்தோறும் வித்தியாசாலை நிறுவுதலும் சைவப் பிரசாரம் செய்தலுமேயெனக் கண்டார்.

(i) ஆறுமுகநாவலர் பற்றி பண்டிதமணி கூறியுள்ள கூற்று கிழக்கிலங்கை நாவலருக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை விளக்குக.

(ii) 'ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மா ஆக்கியது' என்ற கூற்றினை விளக்குக. இக்கூற்று இங்கு ஏன் கையாளப்பட்டுள்ளது ?

(iii) நாவலர் இருவருக்குமிடையே உள்ள வேற்றுமையாகக் கட்டுரையாசிரியர் குறிப்பிட்டுள்ளதை எடுத்துக் காட்டுக.

(iv) இந்த உரைப்பகுதியில் கட்டுரையாசிரியர் கூறியுள்ள பிரதான கருத்தினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. அப்பிரதான கருத்தை வெளிப்படுத்த அவர் கையாண்டுள்ள **இரு** உத்திகள் எவை ?

(v) (அ) தேர்வு, தேர்ச்சி என்ற சொற்கள் இங்கு தரும் கருத்தினை எழுதுக.

(ஆ) தூண்டுகோல், தரிசனம், வழிகோலுதல் ஆகிய சொற்களை வைத்துக் கருத்துப்புலப்பட சுயமாக தனித்தனி வாக்கியக்கள் அமைக்குக.

($5 \times 5 = 25$ புள்ளிகள்)

## பகுதி III

(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.)

(ஒவ்வொன்றுக்கும் 15 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.)

4. **மழைக்கை** நாடகத்தில் குருஷேத்திரப் போர்க்களத்தில் கண்ணன் - கன்னன் சந்திப்பை அடிப்படையாகக் கொண்டு அவ்விருவரதும் குண இயல்புகளை ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துக.

5. 'செந்தமிழ் மரபும் இஸ்லாமிய மரபும் வழுவாது காவியம் இயற்றியவர் உமறுப்புலவர்' என்பதை **நோக்கியும் நோக்காதும் போல்** என்ற கட்டுரையில் ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப்பதை உதாரணங்கள் தந்து விவரிக்குக.

6. (i) **கோளுரை** என்ற கவிதையூடாகக் கவிஞர் கூற விழைவது என்ன ?

   (ii) அதை அவர் கூறுவதிலுள்ள கவிச் சிறப்புகளை ஆராய்க.

7. '**பைத்தியக்காரி** என்ற தலைப்பிலான சிறுகதை ஒரு பெண்ணின் துன்பம் நிறைந்த வாழ்க்கையை மட்டுமன்றி யுத்தத்தின் கொடுமையையும் சித்திரிக்கின்றது' - ஆராய்க.

❊ ❊ ❊